O.C. 150

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Acts and Rules relevant to Municipal Administration Paper-III (Without Books) | 178 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour          Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. If the quantity of goods or services to be procured are required to be delivered at different locations, the Tender Accepting Authority may opt for
கொள்முதல் செய்யப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகளின் அளவு வெவ்வேறு இடங்களில் வழங்கப்பட வேண்டியிருந்தால், டெண்டர் ஏற்றுக்கொள்ளும் அதிகாரி இவற்றில் எதனை தேர்வு செய்யலாம்?

(A) Piece-work Contract
துண்டு வேலை ஒப்பந்தம்

(B) Lump-sum Contract
கட்டளவிலி ஒப்பந்தம்

(C) Turn-key Contract
ஆயத்த தயாரிப்பு ஒப்பந்தம்

(D) Fixed Rate Contract
நிலையான விகித ஒப்பந்தம்

2. For the value of works exceeding Rs. 20 crore, tender notices in English should be published
ரூ. 20 கோடிக்கு மேல் மதிப்புள்ள பணிகளுக்கு, ஆங்கிலத்தில் ஒப்பந்தப்புள்ளி எந்த பதிப்பில் அறிவிப்புகள் வெளியிடப்பட வேண்டும்?

(A) In the edition of the state concerned
சம்பந்தப்பட்ட மாநிலத்தின் பதிப்பில்

(B) All India Edition
அகில இந்திய பதிப்பு

(C) All District Editions in the State
மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட பதிப்புகள்

(D) None of the above
மேற்கூறியவை எதுவும் இல்லை

3. A building produces, an average waste generation rate exceeding __________ per day should establish a "bulk waste generator" under Solid Waste Management Rules, 2016.
ஒரு கட்டிய குடியிருப்புகளிலிருந்து ஒரு நாளைக்கு சராசரியாக __________ ஐ விட அதிகமான குப்பை உற்பத்தி விகிதத்தைக் கொண்டிருந்தால், திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 இன் கீழ் "bulk waste generator" ஐ நிறுவ வேண்டும்.

(A) 100 MT (B) 200 MT
(C) 300 MT (D) 400 MT

4. Which is not a Dry waste under Solid Waste Management Rules, 2016?
திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 இன் கீழ் உலர் கழிவு அல்ல

(A) Bio-degradable waste
மக்கும் கழிவுகள்

(B) Recyclable and non recyclable waste
மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள்

(C) Combustible waste
எரியக்கூடிய கழிவுகள்

(D) None of the above
மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

5. The District Collector is authorized to review _________ the performance of local bodies on the implementation of Solid Waste Management Rules, 2016.
திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016, செயல்படுத்தல் குறித்த உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை, __________ மதிப்பாய்வு செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் உண்டு.

(A) Once in 2 months
2 மாதங்களுக்கு ஒரு முறை

(B) Once in 3 months
3 மாதங்களுக்கு ஒரு முறை

(C) Once in 6 months
6 மாதங்களுக்கு ஒரு முறை

(D) Once in a year
வருடத்திற்கு ஒரு முறை

6. User fee by the waste generators for Solid Waste Management activities are paid to
திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கான, திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் யாருக்கு செலுத்தப்படுகிறது?

(A) State Government
மாநில அரசு

(B) Central Government
மத்திய அரசு

(C) Local Body concerned
சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு

(D) None of the above
மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

7. Non recyclable waste having calorific value of ________ or more shall not be disposed of on landfills and shall only be utilized for generating energy under.
__________ அல்லது அதற்கு மேற்பட்ட கலோரிஃபிக் மதிப்பைக் கொண்ட மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகளை குப்பைத் தொட்டிகளில் அப்புறப்படுத்தக்கூடாது. மேலும் ஆற்றல் உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(A) 1000 Kcal/kg
(B) 1200 Kcal/kg
(C) 1500 Kcal/kg
(D) 1800 Kcal/kg

8. Under Solid Waste Management Rules, 2016, landfill site should be ________ away from river.
திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 இன் கீழ், குப்பைக் கிடங்கு ஆற்றிலிருந்து __________ தொலைவில் இருக்க வேண்டும்

(A) 100 meter
100 மீட்டர்
(B) 200 meter
200 மீட்டர்
(C) 300 meter
300 மீட்டர்
(D) 1 km
1 km

9. Under Solid Waste Management Rules, 2016, landfill site should be ________ away from Highways.
திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 இன் கீழ், நிலப்பரப்பு தளம் நெடுஞ்சாலைகளிலிருந்து __________ தொலைவில் இருக்க வேண்டும்.

(A) 100 meter
100 மீட்டர்
(B) 200 meter
200 மீட்டர்
(C) 300 meter
300 மீட்டர்
(D) 500 meter
500 மீட்டர்

10. The organic material of the solid waste will decompose
திடக்கழிவின் கரிமப் பொருள் எந்த முறையில் சிதைவடையும்?

(A) By the flow of water
நீர் ஓட்டத்தால்
(B) By the soil particles
மண் துகள்களால்
(C) By the action of microorganism
நுண்ணுயிரிகளின் செயல்பாட்டால்
(D) By oxidation
ஆக்சிஜனேற்றத்தால்

11. Which of the following gas in produced from Landfill waste?
குப்பை கிடங்கு கழிவுகளிலிருந்து பின்வரும் எந்த வாயு உருவாகிறது?

(A) Biogas
உயிரி வாயு

(B) Natural gas
இயற்கை எரிவாயு

(C) Liquified petroleum gas
திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு

(D) All of the above
மேற்கூறிய அனைத்தும்

12. Which is the format for annual report on solid waste management to be submitted by the local body to the state pollution control board?
உள்ளாட்சி அமைப்புகள் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் சமர்ப்பிக்க வேண்டிய திடக்கழிவு மேலாண்மை குறித்த வருடாந்திர அறிக்கைக்கான படிவம் என்ன?

(A) Form - I
படிவம் - I

(B) Form - II
படிவம் - II

(C) Form - III
படிவம் - III

(D) Form - IV
படிவம் - IV

13. Manufacture and use of Non-recyclable plastic if any should be phased out in _________ year time.
மறுசுழற்சி செய்யமுடியாத பலஅடுக்கு நெகிழி உற்பத்தி மற்றும் பயன்பாடு ஏதேனும் இருந்தால் ___________ ஆண்டுகளுக்குள் நிறுத்தப்பட வேண்டும்.

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

14. As per PWM rules 2016, the marking or labelling explained in _________.
பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016-இல் குறியிடுதல் மற்றும் முத்திரையிடுதல் குறித்து விவரிப்பது?

(A) Rule - 10
விதி - 10

(B) Rule - 11
விதி - 11

(C) Rule - 12
விதி – 12

(D) Rule - 13
விதி - 13

15. HDPE means
HDPE என்பது

(A) High Density Poly Ethylene
ஹை டென்சிடி பாலி எத்திலீன்

(B) High Density Pro Ethylene
ஹை டென்சிடி புரோ எத்திலீன்

(C) High Density Phenyl Ethylene
ஹை டென்சிடி பினைல் எத்திலீன்

(D) High Density Poly Propylene
ஹை டென்சிடி பாலிபுரப்பிலின்

16. Every application for renewal of registration shall be made at least ________ days before the expiry of the validity of the registration certificate.
பதிவு புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பதிவுச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு குறைந்தது ________ நாட்களுக்கு முன்னதாகச் செய்யப்பட வேண்டும்.

(A) 30
(B) 90
(C) 120
(D) 150

17. The local body shall utilize the amount paid by the customers for the carry bags exclusively for the ________ within their Jurisdictions.
உள்ளாட்சி அமைப்பானது, வாடிக்கையாளர்கள் நெகிழி கைப்பைகளுக்காக செலுத்தும் தொகையை, தங்கள் அதிகார வரம்பிற்குள் ________ காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(A) Salary of the workers
பணியாளர்களின் ஊதியங்களுக்காக

(B) Infrastructure work
கட்டமைப்பு வசதிகளுக்காக

(C) Sustainability of the Waste Management System
கழிவு மேலாண்மை அமைப்பின் நிலைத்தன்மைக்காக

(D) None of the above
மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

18. The State Level Advisory Body for effective implementation of plastic waste management rules, meets atleast once in _________.
நெகிழி கழிவு மேலாண்மை விதிகளினை திறம்பட செயல்படுத்துவதற்கான மாநில அளவிலான ஆலோசனைக் குழு __________ ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டும்.

(A) Three months
மூன்று மாதங்கள்

(B) Six months
ஆறு மாதங்கள்

(C) Nine months
ஒன்பது மாதங்கள்

(D) Twelve months
பன்னிரெண்டு மாதங்கள்

19. Every local body shall prepare and submit an annual report in Form-V to the concerned secretary in-charge of the Urban Development Department by the __________ of every year.
ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் வருடாந்திர அறிக்கையினை படிவம்-V-ல் தயாரித்து ஒவ்வொரு வருடமும் __________ க்குள் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சம்பந்தப்பட்ட பொறுப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(A) $30^{th}$ April
ஏப்ரல் 30

(B) $30^{th}$ May
மே 30

(C) $30^{th}$ June
ஜூன் 30

(D) $30^{th}$ July
ஜூலை 30

20. Rule 4 of Bio-medical waste management rules, explain about
உயிரி மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளின், விதி 4 விளக்குவது

(A) Duties of the occupier
ஆக்கிரமிப்பாளரின் கடமைகள்

(B) Duties of the operator of a common bio-medical waste treatment and disposal facility
பொதுவான உயிரி மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் வசதியின் இயக்குநரின் கடமைகள்

(C) Duties of Authorities
அதிகாரியின் கடமைகள்

(D) Treatment and disposal
செயல்முறை மற்றும் அகற்றுதல்

21. As per schedule III of the Bio-medical waste management rule, the authority, who provide or allocate suitable land for development of common bio-medical waste facilities in Municipal area?
உயிரி கழிவு மேலாண்மை விதிகளின், அட்டவணை-IIIன் படி அந்தந்த அதிகார வரம்புகளில் பொதுவான உயிரி மருத்துவக் கழிவு நகர்ப்பகுதிகளில் பொதுவான உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பொருத்தமான நிலத்தை வழங்கிட வேண்டிய அதிகாரி

(A) Municipal Health Officer Concerned
சம்பந்தப்பட்ட நகர்நல அலுவலர்

(B) Commissioner Concerned
சம்பந்தப்பட்ட ஆணையர்

(C) Tahsildar Concerned
சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்டாட்சியர்

22. Untreated human anatomal waste, animal anatomal waste, solid waste and Biotechnology waste shall not be stored beyond a period of _________ hours.
சுத்திகரிக்கப்படாத மனித உடற்கூறியல் கழிவுகள், விலங்கு உடற்கூறியல் கழிவுகள், அழுக்கடைந்த கழிவுகள் மற்றும் உயிரி தொழில்நுட்பக் கழிவுகள் __________ மணி நேரத்திற்கு மேல் சேமிக்கப்படக் கூடாது.

(A) 12
(B) 24
(C) 48
(D) 60

23. Who shall monitor the implementation of Biomedical waste management rules, in respect of all the Armed Forces health care establishments under the Ministry of Defence?
பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள அனைத்து ஆயுதப்படை சுகாதார நிறுவனங்களிலும் உயிரி மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள் கடைப்பிடிக்கப்படுவதை கண்காணிக்கும் அதிகாரி

(A) The Central Pollution Control Board
மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்

(B) The State Pollution Control Board
மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்

(C) Secretary, Health Department
செயலாளர், மருத்துவத்துறை

(D) None
ஏதுமில்லை

24. As per Bio-medical waste management rule, the appeal shall be disposed of with a period of __________ days from the date of its filing.
உயிரி-கழிவு மேலாண்மை விதிகளின்படி, சமர்ப்பிக்கப்படும் மேல்முறையீடானது சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து __________ தினங்களுக்குள் முடிவு பெற வேண்டும்.

(A) 45
(B) 60
(C) 75
(D) 90

25. Contaminated waste (Recyclable) have to be collected in _________ coloured containers.
மாசுபட்ட கழிவுகள் (மறுசுழற்சி செய்யக்கூடிய) __________ நிறமுடைய கலன்களில் சேகரிக்கப்படுகிறது.

(A) Yellow
மஞ்சள்
(B) Blue
நீலம்
(C) Red
சிவப்பு
(D) White
வெள்ளை

26. The parameter of BOD, of the effluent, which is to be discharged into the Sewer from a common biomedical waste disposal facility is
பொதுவான உயிரி மருத்துவக் கழிவு அகற்றல் வசதியிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரில் இருக்க வேண்டிய BOD-ன் அளவுரு

(A) 30 mg/l
30 மி.கி/லி
(B) 10 mg/l
10 மி.கி/லி
(C) 100 mg/l
100 மி.கி/லி
(D) 250 mg/l
250 மி.கி/லி

27. As per Bio-medical waste rules, the application for Authorisation or Renewal for authorisation for management of common biomedical waste facility has to be submitted in _________ Form.
உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகளின் படி, பொதுவான உயிரி மருத்துவ கழிவு அகற்றும் வசதி ஏற்படுத்திட அங்கீகாரம் அல்லது அங்கீகாரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் படிவம்

(A) I
(B) II
(C) III
(D) IV

28. The ground water table level should be a minimum of ________ meters below the lower level of deep burial pit.
நிலத்தடி நீர்மட்டமானது, ஆழமான புதைகுழியின் கீழ்மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் __________ மீட்டருக்கு கீழே இருக்க வேண்டும்.

(A) 6
(B) 3
(C) 2
(D) 1

29. In which rule of Bio Medical Waste Management Rule says that the monitoring of implementation of rules in health care facilities?
உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகளில் எவ்விதி சுகாதார பராமரிப்பு வசதிகளில் விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தல் குறித்து விளக்குகிறது?

(A) Rule 10
விதி எண் 10
(B) Rule 11
விதி எண் 11
(C) Rule 12
விதி எண் 12
(D) Rule 13
விதி எண் 13

30. Every occupier or operator of common bio medical waste treatment facility shall submit on annual report to the prescribed authority in Form IV on or before the __________ of every year.
பொது உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையத்தின் ஒவ்வொரு குடியிருப்பாளரும் அல்லது இயக்குபவரும் ஒவ்வொரு ஆண்டும் __________ அல்லது அதற்கு முன்னர் படிவம் IV ல் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் வருடாந்திர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(A) May 31st
மே 31
(B) July 31st
ஜூலை 31
(C) June 30th
ஜூன் 30
(D) August 30th
ஆகஸ்ட் 30

31. Blue colour container has to be collected the following Bio medical waste
நீல நிற கலன்களில் சேகரிக்கப்படும் உயிரி மருத்துவ கழிவுகள் எது?

(A) Contaminated waste
மாசுப்பட்ட கழிவுகள்
(B) Soiled waste
அழுக்கடைந்த கழிவுகள்
(C) Discarded medicines
கைவிடப்பட்ட மருந்துங்கள்
(D) Glass waste
கண்ணாடி கழிவுகள்

32. The parameter of pH of the effluent generated which is to be discharged into the sewer from the common bio medical waste disposal facility is
ஒரு பொதுவான உயிரி மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் வசதியின் உரிமையின் அல்லது உருவாக்குபவர் வெளியிடப்படும் pHன் அளவு

(A) 6.5 – 9.0
(B) 6.5 – 7
(C) 6.5 – 8
(D) 6 – 9

33. In which schedule describe the List of Prescribed Authorities and Corresponding Duties?
உயிரி மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளில் எந்த அட்டவணை பரிந்துரைக்கப்பட்ட அதிகாரியின் கடமைகள் மற்றும் தொடர்புடைய கடமைகள்?

(A) Schedule I
அட்டவணை I
(B) Schedule II
அட்டவணை II
(C) Schedule III
அட்டவணை III
(D) Schedule IV
அட்டவணை IV

34. The treatment and Disposal options for the waste sharps including Metals is ________.
உலோகவிகள் உட்பட கழிவு உரிமைகள் அகற்றுவதற்கு மற்றும் செயல்முறைக்கான வழிகள்

(A) Shredding
அரைத்தல்
(B) Inceneration
எரியூட்டல்
(C) Disinfections
கிருமி நீக்கம்
(D) Dry Heat Sterilisation
உள் வெப்ப கருத்தடை

35. As per Bio-medical waste management rules, disposable bottles, urine bags, syringes, gloves shall be collected in ________ colored non-chlorinated plastic bags.
உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகளின் படி, ஒரு முறை பயன்பட்டு அழிக்கப்படக்கூடிய, பாட்டில்கள், யூரின் பைகள், ஊசிகள் கையுறைகள் ஆகியவற்றை ________ கலர் பிளாஸ்டிக் பைகளில் மட்டுமே சேகரிக்கப்பட்டு கையாளப்பட வேண்டும்.

(A) Green
பச்சை
(B) Yellow
மஞ்சள்
(C) Red
சிகப்பு
(D) White
வெள்ளை

36. As per Bio-medical waste management rules, the standard depth for dugging for deep burial, shall be of __________ meters.
உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகளின் படி ஆழப்புதைக்கும் குழிகளில் வெட்டப்படும் ஆழம் __________ அளவில் இருக்க வேண்டும்.

(A) 1.5 meters
1.5 மீட்டர்

(B) 2.0 meters
2.0 மீட்டர்

(C) 2.5 meters
2.5 மீட்டர்

(D) 3.0 meters
3.0 மீட்டர்

37. As per Bio-medical waste management rules, the groundwater table level should be a minimum __________ meters below the level of deep burial pit.
உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகளின் படி, ஆழப்புதைக்கும் குழிகள் அமைக்கும்போது, குழியின் கீழ்மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் __________ மீட்டர் ஆழத்தின் கீழ் தான் நிலத்தடி நீர்மட்டம் இருக்க வேண்டும்.

(A) Six
ஆறு

(B) Five
ஐந்து

(C) Ten
பத்து

(D) Twenty
இருபது

38. Which ministry under Union Government, framed the rules for management of construction and demolition waste?
கட்டிட மற்றும் இடிபாட்டு கழிவு மேலாண்மை விதிகள் ஒன்றிய அரசின் எந்த அமைச்சகத்தினால் உருவாக்கி வெளியிடப்பட்டது?

(A) Earth Science
பூகோள அறிவியல்

(B) Law and Justice
சட்டம் மற்றும் நீதி

(C) Environment Forest and Climate Change
சுற்றுப்புறச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம்

(D) Housing and Urban Affairs
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறம்

39. Waste generators generating more than __________ of construction and demolition waste, shall segregate the waste into, concrete, soil, wood, plastics, bricks.
நாள் ஒன்றுக்கு __________ மெ.டன்.க்கு மேல் கட்டிட மற்றும் இடிபாட்டு கழிவுகளை உருவாக்குவோர், அதனை கான்க்ரீட், மண், மரம், பிளாஸ்டிக்ஸ், செங்கல் ஆகியவாறு தரம்பிரித்து அளிக்க வேண்டும்.

(A) 5
(B) 10
(C) 15
(D) 20

40. The duties of local authorities are given in rule No. __________ of Construction and Demolition Waste Management Rules.
உள்ளாட்சி அமைப்புகளின் கடமைகள் குறித்து கட்டிட மற்றும் இடிபாட்டு கழிவு மேலாண்மை விதிகளின் விதி எண் __________ ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) 5
(B) 6
(C) 7
(D) 8

41. Construction and Demolition Waste Management Rules got implemented from the year of __________.
கட்டிட மற்றும் இடிபாடு கழிவு மேலாண்மை விதிகள் எந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது?

(A) 2015
(B) 2017
(C) 2016
(D) 2018

42. As per Construction and Demolition Waste Management Rules, the criteria for site selection for storage and processing or recycling facilities for construction and demolition waste, is prescribed in __________.
கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவு மேலாண்மை விதிகளின்படி, கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவுகளை சேமித்து பதப்படுத்துதல் அல்லது மறுசுழற்சி செய்யும் வசதிகளுக்கான அளவுகோல்கள் __________இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

(A) Rule 12
விதி 12
(B) Rule 11
விதி 11
(C) Schedule I
அட்டவணை I
(D) Schedule II
அட்டவணை II

43. Hazardous and other Waste (Management and Transboundary Movement) Rules 2016, was notified by
அபாயகரமான மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை தாண்டிய இடப்பெயர்ச்சி) விதிகள் 2016 யாரால் உருவாக்கி வெளியிடப்பட்டது?

(A) Central Pollution Control Board
மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(B) National Green Tribunal
தேசிய பசுமை தீர்ப்பாயம்

(C) Union Government
ஒன்றிய அரசு

(D) State Government
மாநில அரசு

44. Hazardous Waste includes
அபாயகரமான கழிவுகள் கீழ்க்கண்ட கழிவுகளை உள்ளடக்கியது

(A) Chemical
வேதியல்

(B) Biological
உயிரியல்

(C) Toxic
விஷமான

(D) All the above
இவை அனைத்தும்

45. "Environment Sound Technology" as per Hazardous and other Waste Management Rules, means any technology approved by __________.
அபாயகரமான மற்றும் இதர கழிவு மேலாண்மை விதிகளின்படி, "சுற்றுச்சூழலுக்கேற்ற சரியான தொழில்நுட்பம்" எனப்படுவது __________ ஆல் அனுமதிக்கப்பட்ட தொழில்நுட்பம் ஆகும்.

(A) Central Pollution Control Board
மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(B) State Pollution Control Board
மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(C) Central Government
மத்திய அரசு

(D) State Government
மாநில அரசு

46. As per Hazardous and other Waste Management Rules, the responsibility of State Government are defined in ___________.
அபாயகரமான மற்றும் இதர கழிவு மேலாண்மை விதிகளில், மாநிலங்களின் பொறுப்புகள் பற்றி ___________ ல் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) Rule 4
விதி 4

(B) Rule 5
விதி 5

(C) Rule 6
விதி 6

(D) Rule 7
விதி 7

47. ___________ has the power to suspend or cancel an authorisation, under Hazardous and other Waste Management Rules.
அபாயகரமான மற்றும் இதர கழிவு மேலாண்மை விதிகளின் கீழ், விதி எண்-6ன் படி ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியினை, நிறுத்தி வைக்கவோ ___________ க்கு அதிகாரமுள்ளது.

(A) State Pollution Control Board
மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(B) Central Pollution Control Board
மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(C) State Government
மாநில அரசு

(D) Union Government
ஒன்றிய அரசு

48. ___________ is the nodal agency for import and export of hazardous and other wastes.
அபாயகரமான மற்றும் இதர கழிவுகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி குறித்து விவகாரங்களை ஒருங்கிணைக்கும் முகமையாக ___________ செயல்படுகிறது.

(A) Ministry of External Affairs
அயலக விவகார துறை அமைச்சகம்

(B) Ministry of Commerce and Industry
வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

(C) Central Pollution Control Board
மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(D) Ministry of Environment, Forest and Climate Change
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

49. The responsibility of safe transport of hazardous waste, shall be of __________.
அபாயகரமான கழிவுகளை கொண்டு செல்லும்போது, அதை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கான பொறுப்பு __________ ஐ சாரும்.

(A) Sender only
அனுப்புவர் மட்டும்

(B) Receiver only
பெறுபவர் மட்டும்

(C) Either sender or receiver
அனுப்புவர் (அல்லது) பெறுபவர்

(D) State Government
மாநில அரசு

50. As per Hazardous and other Waste Management Rules, Flammable wastes are classified as __________ hazardous waste.
அபாயகரமான மற்றும் இதர கழிவு மேலாண்மை விதிகளின் இரண்டாவது அட்டவணைப்படி, எரியக்கூடிய கழிவுகள் __________ அபாயகரமான கழிவுகள் ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(A) Class C1
வகுப்பு C1

(B) Class C2
வகுப்பு C2

(C) Class C3
வகுப்பு C3

(D) Class C4
வகுப்பு C4

51. Which Section of Tamilnadu Public Health Act 1939 deals about lodging houses?
தமிழ்ாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 ன் எந்தப் பிரிவுகள் தங்கும் விடுதிகள் பற்றி விவரிக்கிறது?

(A) Section 101-107
பிரிவு 101-107

(B) Section 108-115
பிரிவு 108-115

(C) Section 116-125
பிரிவு 116-125

(D) Section 126-127
பிரிவு 126-127

52. According to Tamil Nadu Public Health Act, 1939, Milk is
தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 ன்படி பால் என்பது

(A) Skimmed Milk
ஆடை நீக்கிய பால்

(B) Cow Milk and Goat Milk
மாட்டு பால், ஆட்டு பால்

(C) Sterilised Millk
கிருமி நீக்கப்பட்ட பால்

(D) All the above
இவை அனைத்தும்

53. Section 131 of Chapter XV of Tamilnadu Public Health Act 1939 states about
தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 ன் அத்தியாயம் XV ன் பிரிவு 131 எதைப் பற்றி கூறுகிறது ?

(A) Procedure for making and the effect of rules
விதிகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்தலுக்கான நடைமுறை

(B) By-laws by local authorities
உள்ளாட்சி அமைப்புகளில் உருவாக்கப்படும் துணை விதிகள்

(C) Breach of By-laws
துணை விதிகளை மீறுதல்

(D) Procedure for making (or) altering By-laws
துணை விதிகளை உருவாக்குவதற்கும் மாற்றம் செய்வதற்கான நடைமுறை

54. Which section under Tamilnadu Public Health Act 1939 is dealt with issuing of Licence to Lodging house?
தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 ன் எந்த பிரிவு விடுதிகளுக்கு உரிமம் வழங்குவது தெரிவிக்கிறது ?

(A) 107
(B) 107 B
(C) 107 C
(D) 108

55. Which Section of Tamilnadu Public Health Act 1939 is deals with Appeal against decision of Health Officer?
சுகாதார அலுவலரின் முடிவுக்கு எதிரான மேல்முறையீடு குறித்து விவரிக்கும் பிரிவு

(A) Section 136
பிரிவு 136

(B) Section 137
பிரிவு 137

(C) Section 138
பிரிவு 138

(D) Section 139
பிரிவு 139

56. Section - 36 of Tamilnadu Public Health Act 1939 is deals with
தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 ன் பிரிவு 36 எதை பற்றி கூறுகிறது ?

(A) Construction and Closure of Cesspools
சாக்கடை கட்டுதலும் மூடுதலும்

(B) Prohibition of occupation of new buildings without drains
புதிய கட்டிடங்களுக்கு சாக்கடை வசதி இல்லாமல் செல்வதை தடை செய்தல்

(C) Sewage not to be let out into streets
சாக்கடையை தெருக்களில் விடாது இருத்தல்

(D) Pollution of water-courses prohibited
நீர்நிலைகளை அசுத்தம் செய்வதை தடை செய்தல்

57. Solid-waste Management Rules came into force in the year
திடக்கழிவு மேலாண்மை விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

(A) 2015
(B) 2016
(C) 2017
(D) 2018

58. The term "Authorisation" in Definition of Solid Waste Management Rules 2016 is a permission given by
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் வரையறையில் கூறப்படும் அங்கீகாரம் என்பது கீழ்கண்டவற்றுகளில் கொடுக்கப்படும் அனுமதி

(A) State Pollution Control Board
மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்

(B) Pollution Control Committee
மாசுக்கட்டுப்பாட்டு குழு

(C) Urban Local Authority
நகர்புற உள்ளாட்சி அமைப்பு

(D) All the above
மேற்கூறிய அனைத்தும்

59. According to Solid Waste Management Rules 2016, having an average waste generation rate exceeding 100 kg per day is called
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ன் படி ஒரு நாளைக்கு சராசரியாக 100 கிலோவுக்கு அதிகமான கழிவுகளை உருவாக்குவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) Brand Owner
வகைகுறி உரிமையாளர்

(B) Contractor
ஒப்பந்ததாரர்

(C) Bulk Waste Generator
மொத்த கழிவு உருவாக்குபவர்

(D) Form
படிவம்

60. The term "Composting" means
கூட்டு உரமாக்கல் என்பது

(A) A controlled process involving Microbial decomposition of organic matter
உயிரகப் பொருட்களை நுண்ணுயிர் மூலம் சிதைக்கச் செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செய்முறை

(B) The final and safe disposal of solid waste
இறுதியான பாதுகாப்பான முறையில் அகற்றுதல்

(C) A process which entails enzymatic decomposition
செறிவூட்டப்பட்ட நுண்ணுயிர் மூலம் உயிரகப் பொருள்களின் நொதிச்சிதைவைக் கட்டுப்படுத்தும் செய்கிறது

(D) None of the above
இவற்றில் எதுவுமில்லை

61. The term non-bio degradable waste in solid waste management rule 2016 means
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ல் மக்காத உயிரகக் கழிவுகள் என்பது

(A) The process of transforming segregated non-biodegradable waste into new material (or) products.
பிரிக்கப்படாத மட்காத உயிரி திடக் கழிவுகளை, புதிய பொருளாக அல்லது தயாரிப்பு பொருளாக மாற்றுதல்

(B) Any organic materials can be degraded by microorganisms into simple and stable compounds.
யாதொரு கனிம பொருளையும் நுண்ணுயிர்களால் எளிமையாக நிலையான சேர்மங்களாக சிதைக்கக்கூடிய உயிரகப் பொருள்

(C) Any waste that cannot be degraded by microorganisms into simpler stable compounds.
நுண்ணுயிர்களால் எளிமையான நிலையான சேர்மங்களாக சிதைக்க முடியாதவை

(D) Any scientific process by which segregated solid waste is handled for the purpose of reuse.
யாதொரு அறிவியல் சார்ந்த செயல்முறைப்படுத்துதல், ஆதலால் திடக்கழிவுகளை மறு பயன்பாட்டிற்கு பயன்படுத்துவது ஆகும்.

62. According to solid waste management rule 2016, those who generate solid waste are called as
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ன் படி திடக்கழிவுகளை உருவாக்குபவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(A) Waste picker
கழிவு பொறுக்குபவர்

(B) Waste generator
கழிவு உருவாக்குபவர்

(C) Waste hierarchy
கழிவு படிநிலை

(D) None of the above
இவற்றில் எதுவுமில்லை

63. Inerts are
மந்தங்கள் என்பது

(A) Liquid that seeps through solid waste
திடக்கழிவிலிருந்து கசியும் திரவம்

(B) Engineered process involving burning
திடக்கழிவை அதிக வெப்பநிலையில் சிதைக்கும் ஒரு பொறியியல் முறை

(C) Wastes which are not bio-degradable, recyclable or combustible street sweeping or dust and silt removed from the surface of drain
மக்காத உயிரி கழிவுகள், மறு சுழற்சி இயலாத அல்லது தெருக் குப்பைகள் அல்லாத தூசிகள் வடிகால்களிலிருந்து அகற்றப்பட்ட வண்டல் கழிவுகள்

(D) Penalty Imposed on waste generator
கழிவுகளை உருவாக்கும் நபர்களுக்கு விதிக்கப்படும் அபராதம்

64. The liquid that seeps through solid waste is
திடக் கழிவிலிருந்து கசியும் நீர்

(A) Liquid Gas
திரவ வாயு

(B) Methane Gas
மீத்தேன் வாயு

(C) Waste water
கழிவு நீர்

(D) None of the above
இவை எதுவுமில்லை

65. Biodegradable waste shall be stored in
மக்கும் கழிவுகள் சேமிப்பது

(A) Blue Bin
நீலம் டப்பா

(B) White Bin
வெள்ளை டப்பா

(C) Yellow Bin
மஞ்சள் டப்பா

(D) Green Bin
பச்சை டப்பா

66. Land fill site shall be away from
திடக்கழிவு நிரம்புமிடம் எத்தனை தூரத்தில் அமைய வேண்டும்?

(A) 100 mtr away from River
ஆறுகளிலிருந்து 100 மீட்டர்

(B) 200 mtr from a pond
குளங்களிலிருந்து 200 மீட்டர்

(C) 20 km away from Airports
விமான நிலையங்களிலிருந்து 20 கி.மீ.

(D) All the above
இவை அனைத்தும்

67. Short title, extent and commencement of Tamil Nadu Registration of Births and Deaths Rules 2000 are
தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் விதிகள் 2000ன் குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம் ஆகியவை

(A) These rules may be called as the Tamil Nadu Registration of Births and Deaths Rules 2000
இவ்விதிகள் தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் விதிகள் 2000 என அழைக்கப்படும்

(B) These rules shall extend to the whole of the State of Tamil Nadu
இவ்விதிகள் தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கும் அளாவிற்கும்

(C) They shall come into force on the 1st January 2000
இவ்விதிகள் 1.1.2000 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் அளவாகும்

(D) All the above
இவை அனைத்தும்

68. In Tamil Nadu Registration of Births and Deaths Rules 2000, the definition "Forms" means
தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் விதிகள் 2000-ல் படிவம் என்பதின் பொருள் வரையறை?

(A) A Section of Act
சட்டத்தின் பிரிவு

(B) A Form appended to Rules
இணைப்பு படிவம்

(C) State Government
மாநில அரசு

(D) Register of Births and Deaths
பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவேடு

69. In which rule of Tamilnadu Registration of Births and Deaths Rules 2000 is states about Form for giving Information of Births and Deaths?
தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவு விதிகள் 2000ல் பிறப்புகள் மற்றும் இறப்புகள் பற்றிய தகவல் கொடுப்பதற்கான படிவம் தொடர்பாக விவரிக்கும் விதி

(A) Rule 3
விதி 3

(B) Rule 4
விதி 4

(C) Rule 5
விதி 5

(D) Rule 6
விதி 6

70. Which one of the following is correct regarding Forms of Register under Section 16?
கீழ்கண்டவற்றில் பிரிவு 16ன் கீழ் பதிவேட்டிற்குரிய படிவம் தொடர்பாக சரியானது எது?

(A) The legal part of the Form Nos. 1, 2 and 3 shall be the Form Nos. 7, 8 and 9 and shall constitute the birth register, death register and still birth register respectively.
படிவம் 1, 2 மற்றும் 3ன் பகுதியாவது முறையே பிறப்பு பதிவேடு, இறப்பு பதிவேடு மற்றும் இறந்து பிறந்தவை பதிவேடு என படிவம் எண் 7, 8 மற்றும் 9 ஆக அமையும்.

(B) From 1st January of each calendar year new registration number starting from No. 1 should be followed and continues till 31st December of the year.
ஒவ்வொரு ஆங்கில ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் புதிய பதிவு எண் 1 முதல் தொடங்கி தொடர்ந்து அந்த வருடத்தில் டிசம்பர் 31 வரை பின்பற்றல் வேண்டும்

(C) An event which occurred in any previous year reported during the current year shall be recorded in the current year register only.
ஏதேனும் ஒரு முந்தைய ஆண்டில் நிகழ்ந்ததொரு நிகழ்வானது அது எந்த ஆண்டில் அறிவிக்கப்படுகிறதோ, அந்த ஆண்டுக்குறிய பதிவேட்டில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்

(D) All the above
மேற்கண்ட அனைத்தும்

71. In Tamil Nadu Registration of Births and Deaths Rule 2000, Rule 14 Section 19 (1) mentioned the Forms
தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் விதிகள் 2000-ன் விதி 14ன் பிரிவு 19 உட்பிரிவு 1ல் குறிப்பிடும் படிவங்கள்

(A) Form 11 for Births
பிறப்புகளுக்கான படிவம் 11

(B) Form 12 for Deaths
இறப்புகளுக்கான படிவம் 12

(C) Form 13 for Still Births
இறந்து பிறந்தவைக்கான படிவம் 13

(D) All the above
மேற்கண்ட அனைத்தும்

72. Rule 8 of Tamil Nadu Registration of Births and Deaths Rule 2000 deals with
தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் விதிகள் 2000-ன் விதி 8-ன் படி செயல்படுத்தப்படும் நடவடிக்கை

(A) Birth (or) Death in Vehicle
ஊர்தியில் நிகழும் பிறப்பு அல்லது இறப்பு பதிவு செய்தல்

(B) Notification and Forms of Certificate under Section 10
பிரிவு 10ன் கீழ் அறிவிக்கை மற்றும் சான்றிதழ் படிவம்

(C) Extracts of Registration entries to be given under Section 12
பிரிவு 12ன் கீழ் பதிவுகளுக்கு எடுபகுதி கொடுத்தல்

(D) None of the above
மேற்கண்ட எவையும் இல்லை

73. An Appeal Authority against the order made under sub-rule 2, by Chief Registrar of Birth and Death is
துணை விதி-2-இன் கீழ் பிறப்பு மற்றும் இறப்பு முதன்மை பதிவாளரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டிய மேல்முறையீட்டு அலுவலர் யார்?

(A) Revenue Divisional Officer
வருவாய் கோட்டாட்சியர்

(B) District Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Commissioner of Corporation
மாநகராட்சி ஆணையர்

(D) Government
அரசு

74. What is the Form number for Issuing birth certificate?
பிறப்பு சான்றிதழ் வழங்கும் படிவம் எண் என்ன?

(A) Form – 2
படிவம் – 2

(B) Form – 5
படிவம் – 5

(C) Form – 4
படிவம் – 4

(D) Form – 3
படிவம் – 3

75. Who is the birth and death register in municipal limit?
நகரப்பகுதியில் பிறப்பு இறப்பு பதிவாளர் யார்?

(A) Sanitary Inspector
சுகாதார ஆய்வாளர்

(B) RDO
வருவாய் கோட்டாட்சியர்

(C) Municipal Commissioner
நகராட்சி ஆணையர்

(D) Revenue Inspector
வருவாய் ஆய்வர்

76. Under Section 9 (1) of Birth and Death Act, what is the late fee for Registering a birth and death within 22 to 30 days?
விதி 9(1) ன் கீழ் 22 முதல் 30 நாட்களுக்குள் பிறப்பு/இறப்பு பதிவு செய்ய தாமதமாக கட்டணம் எவ்வளவு?

(A) 500
(B) 100
(C) 200
(D) 10

77. What is the late fee for if a birth and death, which has not been Registered within one year of its occurrence?
பிறப்பு இறப்பினை ஒரு வருட காலத்திற்குள் பதிவு செய்யவில்லை என்றால் காலதாமத கட்டணம் எவ்வளவு?

(A) 200
(B) 100
(C) 500
(D) 300

78. As per Registration of Birth and Death, Act 1969, "Registers" dealt under section
பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969-இன்படி 'பதிவாளர்' பற்றி விளக்கும் பிரிவு

(A) 7
(B) 12
(C) 11
(D) 10

79. Which body is the nodal authority for implementation of Battery waste management rules, 2022 at Central Level?
மத்திய அளவில் எந்த அமைப்பு பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள் 2022 செயலாக்கம் குறித்து பொறுப்பு அமைப்பு (Nodal Authority) செயல்படுகிறது?

(A) CPCB
மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(B) SPCB
மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம்

(C) BIS
இந்திய தரநிலை நிறுவனம்

(D) None of the above
மேற்கண்ட எவையுமில்லை

80. When did the Battery Management Rules 2022 came into force?
பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள், 2022 எப்பொழுது நடைமுறைக்கு வந்தது?

(A) 24-8-2022
(B) 01-01-2022
(C) 1-4-2022
(D) 01-07-2022

81. The Rule-15 of Battery Waste Management Rules deals with
பேட்டரி கழிவு மேலாண்மை விதியின் பிரிவு-15 கையாள்வது

(A) Committee for Implementation
செயல்படுத்துவதற்கான குழு

(B) Centralised Online Portal
மைய இணைய போர்டல்

(C) Functions of SPCB
மாநிலமாசு கட்டுபாட்டு வாரிய பணிகள்

(D) Functions of CPCB
மத்தியமாசு கட்டுபாட்டு வாரிய பணிகள்

82. How often should the implementation committee meeting be held under Battery Waste Management Rules 2022?
பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள், 2022 இன்படி எத்தனை மாதங்களுக்கு ஒருமுறை செயல்படுத்தும் குழு கூட்டம் நடைபெற வேண்டும்?

(A) 12 months
12 மாதங்கள்

(B) 3 months
3 மாதங்கள்

(C) 4 months
4 மாதங்கள்

(D) 6 months
6 மாதங்கள்

83. Which of the following is not 'Domestic Hazardous Waste'?
கீழ்கண்டவற்றில் எது வீட்டு அபாயகரமான கழிவு இல்லை?

(A) CFL bulbs
CFL பல்புகள்

(B) Used batteries
பயன்படுத்தப்பட்ட பேட்டரிகள்

(C) Vegetable peels
காய்கறி தோல்

(D) Paint drum
பெயின்ட் டிரம்

84. Which of the following form a municipality should apply to pollution control board regarding solid waste management?
ஒரு நகராட்சி திடக்கழிவு கையாளுதல் தொடர்பாக கீழ்க்கண்ட எந்த படிவத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்?

(A) Form IV
படிவம் IV

(B) Form V
படிவம் V

(C) Form I
படிவம் I

(D) Form VI
படிவம் VI

85. Which section of solid waste management rules explain about the reporting of accident?
திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, கீழ்க்கண்ட எந்த பிரிவு விபத்து நேரிட்டால் அளிக்க வேண்டிய அறிக்கை குறித்து விளக்குகிறது?

(A) Section 9
பிரிவு 9

(B) Section 3
பிரிவு 3

(C) Section 7
பிரிவு 7

(D) Section 25
பிரிவு 25

86. What is the time frame specified for Landfill to be enough?
கழிவுகளை நிலத்தில் நிரப்பும் இடம் (Landfill) போதுமானதாக இருக்க குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு

(A) 20-25 years
20-25 ஆண்டுகள்

(B) 30-35 years
30-35 ஆண்டுகள்

(C) 10-15 years
10-15 ஆண்டுகள்

(D) 40-45 years
40-45 ஆண்டுகள்

87. As per Rule 24 of Solid Waste Management explaining which of the following subject?
திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் பின்வரும் பொருள் பற்றி விதி 24 ஆனது விளக்குகின்றது ?

(A) Accident Reporting
விபத்து அறிக்கை

(B) Annual Report
ஆண்டறிக்கை

(C) Responsibility of Municipal
நகராட்சி பொறுப்பு

(D) Waste Processing and Disposal
கழிவுகளின் செயலாக்கம் மற்றும் அகற்றுதல்

88. As per Solid Waste Management Rules 2016, how many meters away from rivers should sanitary landfill be established?
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-இன்படி, சுகாதார நிலப்பரப்பு (Sanitary Landfill) ஆறுகளிலிருந்து எத்தனை மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட வேண்டும் ?

(A) 300°
(B) 100°
(C) 500°
(D) 1000°

89. No objection certification from Airport or Airbase should be obtained for setting up of the landfill site which is located within _________ km of Airport or Airbase.
சுகாதார நிலப்பு (Landfill Site) விமான நிலையத்திற்கு அருகில் __________ கிலோ மீட்டருக்குள் இருப்பின் தடையின்மை சான்று விமான நிலையம் அல்லது விமானப்படை தளத்திடம் இருந்து பெறப்பட வேண்டும்.

(A) 30
(B) 50
(C) 20
(D) 60

90. State Pollution Control Board shall furnish it annual report of solid waste 2016, in Form
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-இன் படி மாநில மாசுக்கட்டுபாட்டு வாரியம் தனது ஆண்டறிக்கையை மத்திய மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு சமர்பிக்க வேண்டிய படிவம்

(A) Form V
படிவம் V

(B) Form I
படிவம் I

(C) Form IV
படிவம் IV

(D) Form III
படிவம் III

91. The local authority shall furnish its annual report of solid waste management act 2016, in Form
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-இன் படி, உள்ளாட்சி அமைப்பு தனது ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய படிவம்

(A) Form II
படிவம் II

(B) Form III
படிவம் III

(C) Form V
படிவம் V

(D) Form I
படிவம் I

92. As per solid waste management rules, 2016, the ground water quality of the following periphery of landfill site shall be periodically monitored
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-இன் படி திண்ம கழிவு (Landfill) இருக்கும் பகுதியில் நிலத்தடி நீரின் தரத்தினை பின்வரும் சுற்றளவிற்கு அவ்வப்போது கண்காணிப்பு செய்யப்பட வேண்டும்

(A) 1000 meters
(B) 500 meters
(C) 50 meters
(D) 60 meters

93. As per SWM Rules, 2016, the State Pollution Control Board shall issue the authorization to the Local authority in Form
திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-இன்படி மாசுக்கட்டுபாட்டு வாரியம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்கண்ட படிவத்தில் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

(A) Form II
படிவம் II

(B) Form V
படிவம் V

(C) Form I
படிவம் I

(D) Form VI
படிவம் VI

94. RDF means
RDF என்பது

(A) Refused Derived Fuel
(B) Residual Diesel Fuel
(C) Renewable Derived Fuel
(D) Recyclable Dump Fuel

95. MRF means
MRF என்பது

(A) Material Recovery Facility
(B) Manual Refuse Field
(C) Mechanical Recycling Facility
(D) Municipal Refuse Facility

96. Which industry is largest consumer of RDF in India?
இந்தியாவில் RDF-ஐ அதிகமாக பயன்படுத்தும் தொழிற்துறை எது?

(A) Textile
ஜவுளித்துறை
(B) IT
தகவல் தொழில்நுட்பம்
(C) Agriculture
வேளாண்துறை
(D) Cement
சிமெண்ட்

97. Which of the following is not in MRF processing?
கீழ்க்கண்டவற்றில் எந்த கழிவு MRF ஐ செயலாக்கத்தில் தொடர்புடையது இல்லை?

(A) Glass
கண்ணாடி
(B) Metal
உலோகம்
(C) Plastic
பிளாஸ்டிக்
(D) Food waste
உணவு கழிவு

98. Non-woven bag made directly from the following material
நான்-வோவன் பைகள் கீழ்கண்ட எந்த பொருளிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

(A) Plastic fibres
பிளாஸ்டிக் இழைகள்
(B) Polyethylene
பாலிஎத்திலீன்
(C) Polypropylene
பாலிபுரோப்பீலின்
(D) None of the above
மேற்கண்ட எதுவும் இல்லை

99. The Form V of Plastic Waste Management Rules, 2016 describe about
பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016 படிவம் V குறிப்பிடுவது

(A) Annual Report to be submitted by Local body
உள்ளாட்சி அமைப்புகள் ஆண்டறிக்கை சமர்பித்தல்

(B) Imposition of Environmental Compensation
சுற்றுச்சூழல் இழப்பீடு

(C) Registration of Producers
உற்பத்தியாளர் பதிவு

(D) None of the above
மேற்கண்ட எவையுமில்லை

100. Which of the following Rule of Plastic Waste Management Implementation of Ban imposed on identified single use plastic items, plastic carry bags having thickness less than 120 microns?
பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளில், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் வகைகள் (120 மைக்ரானுக்கு குறைவாக) எந்த பிரிவின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது?

(A) Rule 4
விதி 4

(B) Rule 3
விதி 3

(C) Rule 2
விதி 2

(D) Rule 6
விதி 6